# கிறித்தவ மகளிர் சிறுகதை விழுமியங்கள்

**முனைவர் து. மேஷாக்,**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**

**சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்,**

**சென்னை – 600 059.**

**மின்னஞ்சல் : durai.meshak@gmail.com**

**16**

**ஆய்வுச் சுருக்கம்**

கிறித்தவ மகளிர் தொடக்கத்தில் விவிலியக் கதைகளை விரித்தும் விளக்கியும் தமிழ்ச் சிறுகதைகளாக வெளியிட்டனர். பின்னர், சமூக நடப்பியல் சார்ந்த பல்வேறு கூறுகளிலும் சமயப் பின்னணியோடு சிறுகதைகள், சிறுவர் கதைகள் என வெளியிடத் தொடங்கினர். அவை சமயம் சார்ந்த நிலையில் திருமறை, சமய நம்பிக்கை, வழிபாடு, ஆலயம், பண்டிகை, வேண்டுதல், போதகர், கிறித்தவர்கள் சார்ந்த சமூக நிலை என சமய விழுமியங்களாக விளக்கப்பட்டுள்ளன.

குடும்ப உறுப்பினர்கள் பல்வேறுபட்ட அங்கங்களோடு பல்வேறு நிலைகளில் தொடர்புகொண்டாலும் குடும்பத்திலிருந்து அடிப்படையான சமய வாழ்க்கைப் பயிற்சியோடும் முறையான சமய நெறிகளோடும் சமூகத்தோடு தொடர்பு கொள்வது, ஆழமான சமய ஈடுபாட்டுக்கு இன்றியமையாதது என்பது முதன்மையாக விளக்கப்படுகிறது. சமயம் நற்பண்புகள் உள்ள மனிதனையும் அவனது சமூக நடத்தையையும் வரையறுப்பது எடுத்துக்காட்டப்படுகிறது. பிள்ளைகளை அதிகாரத்தால் அடக்குவதைக் காட்டிலும் அன்பினால் அடக்க முற்படும் தன்மையைச் சுட்டுகிறது. அன்பின் வழி பெற்றோர்களின் பண்புகளை உணர்ந்து கொள்ளும் தன்மைகள் கதைகளில் முன்வைக்கப்படுகிறது. பெற்றோர்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலையும் பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிதலையும் கொண்டு குடும்பத்தின் பல்வேறு சிக்கல்கள் தீர்வதற்கு இக்கதைகள் வழிகாட்டுகின்றன.

கிறித்தவ சமய விழாக்கள் மனிதநேயத்தின் வெளிப்பாடாகவும் சமய நம்பிக்கையின் உறுதியாகவும் கொண்டாடப்பட வேண்டியன. ஆனால், இன்றைய சூழலில் பொருளற்றதாகவும் ஆடம்பர போக்குடையதாயும் கொண்டாட்டங்கள் நிகழ்வதைக் கண்டித்து, மக்களை நெறிப்படுத்தும் போக்கினையும் இப்படைப்புகளில் காண முடிகிறது.

சிறுவர் கதைகளில் அவர்கள் வாழ்க்கையின் அடிப்படை நற்பண்புகளை இளமைக்காலம் முதலே உணரத்தொடங்க வேண்டும் என்பது முன்வைக்கப்படுகிறது. சமய நம்பிக்கையும் சமூக வாழ்க்கையும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. உதவும் மனப்பான்மை, கீழ்ப்படிதல், பொறாமையின்மை, வேறுபாடு பாராட்டாமை, ஆகியவற்றை சிறுவர்களிடம் வலியுறுத்தும் வண்ணம் பெரும்பான்மைச் சிறுகதைகள் அமைந்துள்ளன.

**திறவுச் சொற்கள்:**

திருவிவிலியம், ஆடவர் இறைவன், பண்பாடு, ஒழுக்கம், விழுமியம், மகளிர்.

**முன்னுரை**

கிறித்தவர்களின் மறைநூலான திருவிவிலியம் சமய, சமூக விழுமியங்களை வாழ்க்கையாகவும் போதனையாகவும் எடுத்துரைக்கிறது. அவ்வகையில் கிறித்தவ பெண் எழுத்தாளர்கள் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு குடும்பத்தையும் சமூகத்தையும் நெறிப்படுத்தும் வண்ணம் எழுதியுள்ள

சிறுகதைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பெண்களும் கிறித்தவமும்**

சிறுகதை படைப்பாளர்களில் பெண்களின் பங்கு பல்வேறுபட்ட சிக்கல்களுக்கான தீர்த்திறனையொட்டி தேவைப்படுவதாகவே உள்ளது. அவர்கள் பங்கு பெறுவதால் பெண்களுக்கான வாழ்க்கை மட்டுமின்றி ஆண்கள் தொடங்கி சமூகத்தின் பல்வேறு அங்கங்களும் பெண்கள் மூலமாகவே படைத்து காட்டப்படும் நிலையில் பெண்களை இணைத்த உயிரோட்டத்தில் பல்வேறு சிக்கல்களும் முறையாக சரி செய்யப்படும் நிலை வாய்க்கிறது.

கிறிஸ்தவ சமயத்தை அடிப்படையாகக் கொண்டு அதனையும் பெண்கள் மூலமாக காண்பது முக்கியத்துவப் படுத்தப்படுகிறது.சமயம் குறித்த பணி பொதுமையானது அதற்கான பணிகள் அனைவராலும் செய்யப்பட வேண்டும். செய்பவர்கள் அனைவரும் சமமே என்பதும் உணரப்படும். கிறிஸ்தவம் பெண்களை அவர்களுக்கு உரிய இடத்தில் ஆணுடன் சரிசமமான நிலையில் வைக்கிறது.

சமுதாய அமைப்பையும் உரிமைகளையும் பற்றி பேசும்போது தான், 'இனி உங்களிடையே யூதனென்றும் கிரேக்கனென்றும் அடிமை யென்றும் அடிமை இல்லாதவனென்றும் ஆணென்றும் பெண்ணென்றும் பாகுபாடில்லை. ஏனெனில் நீங்கள் எல்லாரும் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு ஒரே ஆளாக இருக்கிறீர்கள்,' ( ,3:28 புதிய ஏற்பாடு,ப.227)என்று திருத்துதுவர் பவுல் குறிப்பிடுகிறார். செயல் தன்மையால் குடும்ப வாழ்வில் தலைமையேற்று குறிக்கோளை நிலைநாட்டும் பெண்களே படைப்பிலக்கியத்தை தரும்போது அவர்களுடைய படைப்புகள் சிறப்புடையதாக அமைகின்றன.

**குடும்பமும் பெண்களும்**

குடும்பத்தை மையமாகக் கொண்டு படிப்பவராயினும் தொழில் செய்பவராயினும் சமய வாழ்வியலாராயினும் வாழ்வில் வேறு எத்தகைய நிலையை மேற்கொண்டவராயினும் அவர்கள் பிற அங்கங்களோடு தொடர்பு கொள்கின்றனர். குடும்பத்திலிருந்து வெளியே பல அங்கங்களோடு இணையும் பல உறுப்பினர்களும் தம் பணியை சிறப்பாக செய்தால் பல அங்கங்களும் நிறைவான பணியை அடையும். குடும்பத்தில் இருந்து வெளியே சென்று செயல்படும் அவர்கள் ஒழுக்க அடிப்படையில் தவறாது சென்று பிற அங்கங்களோடு தொடர்பு கொள்ளும்போது சமூக ஒழுங்கு பிழைபடாது. பொருளாதார நிலையில் குடும்பத்திற்கு ஆண்கள் பொருளீட்டும் போது பிற நிலைகளில் பெண்கள் பொருளை ஆண்டும் குறிக்கோளில் நடத்தியும் சீர் செய்தும் குடும்பத்தைக் கட்டிக்காப்பது பெரும் பொறுப்பாக உள்ளது. பிள்ளைகளை அதிகாரத்தால் அடக்குவதை காட்டிலும் அன்பினால் அடக்கம் முற்படும் தன்மை பெண்களால் செயல்படுத்தப்படுகிறது. 'பெற்றோர்களின் கண்டிப்பான கட்டுப்பாடுகளுக்கு ஆளாகும் குழந்தை அவர்களால் புறக்கணிக்கப்பட்டதாக உணர்வதும் பெற்றோர்கள் குழந்தைகளின் நடத்தையில் கண்டிப்பான ஒழுங்கு முறைகளையும் விதிகளையும் சுமத்தினால் அவன் கோழை ஆவதும்' (மு ராசமாணிக்கம், உளவியல் துறைகள், தொகுதி-1 ப. 105) உளவியல் அறிஞர்களால் அறிவுறுத்தப்படுகிறது.

தாயின் போதனைக்கு கீழ்ப்படியாத பிள்ளைகள் அவர்கள் போக்கிலேயே விட்டு செய்து ' வேலை நிறுத்தம்' என்ற கதை வெளிப்படுத்துகிறது. ஆடை அலங்காரத்தையும் சிகை அலங்காரத்தையும் செய்துகொள்ள விட்டுவிடும் படியாகவும் தங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் தாயார் அதிகாரம் செலுத்தக்கூடாது எனவும் பிள்ளைகள் விரும்புகின்றனர். இதனால் வருத்தப்படும் தாய் அவர்களை திருத்தி குடும்பத்தை நெறிப்படுத்த வீட்டிலும் அவரவர்களுடைய சொந்த வேலைகளை அவர்கள் விருப்பப்படியே அவர்களை செய்யும்படி கூறுகிறார். தாயால் எல்லாவற்றையும் பூரணமாய் அனுபவித்த அவர்கள் தாங்களாகவே செய்யமுற்படும்போது தங்கள் தவறையும் துன்பங்களையும் அறிந்து கொள்ளுகின்றனர். அங்கே தாயும் தன் விருப்பத்தின்படி செய்ய முற்படும்போது வீட்டின் பிள்ளைகளின் நடத்தையில் மாற்றம் ஏற்படுகிறது. குடும்பத்தில் அவரவர் விருப்பம் என்று இல்லாது

பொதுவான விருப்பம் பின்பற்றப்படும் போது மட்டுமே அது நல்ல குடும்பமாய் விளங்கும் என்பது உணர்த்தப்படுகிறது.

பெண்கள் கல்வி அறிவு பெறுவதினால் ஏற்படும் நன்மைகளை வேதநாயகம் பிள்ளை, ‘ஆடவர்களுக்கு அமைச்சர்களைப் போல சமயத்தில் அறிவு சொல்வார்கள்; செயலாளர்களைப் போல வீட்டு செயல்களை எல்லாம் நடத்திக் கொள்வார்கள்; கணக்கரைப் போல வீட்டைச் சேர்ந்த கணக்குகள் எல்லாம் எழுதிக் கொள்வார்கள்; தாய்போல ஆடவர்களை காப்பாற்றுவார்கள்; மருத்துவர்களைப் போல உடல் நலங்களுக்கு அடுத்த செயல்களை தேடி தேடி செய்வார்கள்; ஆடவர்கள் பிசகி நடந்தால் அவர்களுக்கு குருவைப் போல அறிவுரை சொல்லுவார்கள்,’ (வேதநாயகம் பிள்ளை, பெண் கல்வி, ப. 15)என விரித்துரைக்கிறார்

பெண்கள் திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கை மேற்கொள்ளும் போது தான் செல்லும் குடும்பத்தின் சூழ்நிலைகளை முதலில் புரிந்து பழகிக் கொள்ள வேண்டும். பின்னரே குறைகளை கலைந்தும் நிறைவோடு இணைந்தும் செயல்பட்டு குடும்ப அமைப்பு நிலை நிறுத்த வேண்டும். கணவன் வேலைக்கு சென்றபின் பொழுது போக்க வழி இல்லாது கவலைப்படும் மனைவியைப் பற்றி ‘நல்ல திருப்பம்’ கதை கூறுகின்றது. அத்தகைய சமயத்தில் பிறருக்கு உதவியாக நற்பணி செய்வது மனதிற்கும் குடும்பத்திற்கும் மகிழ்ச்சி தரும் என்பதை அக்கதையில் புலப்படுத்துகிறார் ஆசிரியர். கணவன் மனைவி மட்டும் குடும்பத்தில் இருக்கும் போது இருவருக்கும் இடையே ஏற்படும் சண்டைகளை பிறருக்கு உதவுவதற்கு தம் மனத்தை திருப்புவதால் தவிர்க்கலாம். இத்தகைய சமயங்களில் பிறருடைய உபதேசங்களை காட்டிலும் பெற்று வளர்த்து வழி நடத்திய தாயின் உபதேசம் பயன் தருவதாக அமைகிறது என்பதை ஆசிரியர் அறிவுறுத்துகின்றார். சிறுவர்கள் தம்மைச் சுற்றியுள்ள குடும்பத்தின் நிகழ்வுகளை உலகத்தின் செயல்களை தம் மனதகத்தே பதித்துக் கொண்டு அதன்படியே செயல்பட முடிவெடுக்கின்றனர்அவற்றை ஒழுங்குபடுத்தாது பிள்ளைகளின் போக்குக்கு பெற்றோரே காரணம் என்பதை மகன் தற்கொலை செய்து கொண்ட பின் அவன் தாயின் புலம்பலின் வழி ‘விதைத்ததை அறுப்போம்’ என்னும் கதை வெளிப்படுத்துகிறது.

‘நீ இப்படியும் செய்யலாமாடா, உனக்கு என்ன இல்லாமல் இருந்தது. அழகு, பணம், அந்தஸ்து, அறிவு, ஆற்றல் எல்லாமே இருந்ததடா. நான் உன்னை நல்வழியில் வளர்க்க வழி செய்யாமல் போனேனே, நாங்கள் உனக்கு ஒரு முன்மாதிரியான ஜீவியம் செய்யாமல் போனோமே என்ற அவன் தாயின் அழுகையில் கூக்குரல் வீடு வரை கிழித்துக்கொண்டு எதிரொலித்தது’(காஞ்சனா ஜெயதிலகர், காஞ்சனாவின் சிறுகதைகள், ப. 33) என்று பெற்றோர் குரலாகவே பெற்றோர் தம் மக்களை முறையாக வளர்க்க அறிக்கை விடுகிறார் கதை ஆசிரியர்.

**குடும்பமும் குறிக்கோளும்**

நிறைவான வாழ்வானது மக்கள் ஒழுகுவதற்கான நீதியின் பாற்பட்டது எனப்படும். நன்மை வழிநோக்கி முன்னேறி செல்வது நன்மையையே மூலமாக கொண்டு செயல்படுதல் ஆகும். கிறிஸ்தவ சமயத்தில் சாட்சியாக வாழ்தல் என்பது இன்றியமையாதது என்றும் கிறிஸ்துவின் வாழ்வின் ஒரு அங்கம் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

‘பிறன்மனை நோக்காதா பேராண்மை சான்றோர்க்கு

அறன்னொன்றோ ஆற்ற ஒழுக்கு’ (குறள் 45)

என்ற குறட்பாவின் மூலம் ‘மாற்றான் மனைவியை நோக்கான் செயல் அறம் மட்டுமின்றி அது அவன் ஒழுக்கமாக இருப்பதும் மற்றவர் ஒழுகுவதற்கு எடுத்துக்காட்டாகும் அமைவது’ என்று எடுத்துக்காட்டியுள்ளார் திருவள்ளுவர். அவ்வகையில் சமுதாயமே தன்னை சார்ந்து ஒழுகுவதற்கு

அடிப்படையாக செயல் மேற்கொள்பவனே சாட்சியாக வாழ்பவன்.

அத்தகு விளக்கமாக 'சாட்சி' என்ற கதையைக் காணமுடிகிறது. அலுவலகம் குடும்பம் இவற்றில் தன் கிறித்துவ வாழ்வை செம்மையோடு நடத்தி குறிக்கோள் பிறழாது நிறைவாக நடப்பதாக வாழ்க்கை அமைக்கப்பட்டுள்ளது. போராட்டத்தின் இலக்கு கொள்கைக்கான வெற்றியாகவே அமைய வேண்டும்

**பெண்களும் நற்பண்புகளும்**

பெண்களின் நல்லியல்புகளை வேதநாயகம் பிள்ளை, 'பெண் கல்வி' என்னும் நூலில், 'அவளுக்கு எப்பொழுதும் பிறருக்கு உதவி செய்யும் எண்ணமே தவிர வேறு எண்ணம் இல்லை: உணவிலார்க்கு உணவு படைப்பாள்; உடை இல்லாதவர்களுக்கு உடை தருவாள்; தாயில்லா பிள்ளைகளை தாய் போல் தாங்குவாள் துக்கம் உள்ளவரை தேற்றுவார் பொருளுதவி செய்ய தன்னால் இயலாத போது மொழியுதவியாயினும் செய்வாள்; பிறர் துன்பத்தை நீக்க தன்னால் முடியாத போது அழுது இறங்கி கடவுளை வேண்டுவாள் இன்னும் அவளுடைய எண்ணங்களை சொல்லப்புகின் அளவின்றி விரியும் ஆதலால் இம்மட்டில் நிறுத்தினோம்(வேதநாயகம் பிள்ளை, பெண் கல்வி, ப.45) என்று குறிப்பிடுகிறார்

பெண்கள் மேற்கூறப்பட்ட தன்மைகளைப் பெறும் போது பண்புகளின் அடிப்படையில் முழுமையாகின்றனர். இக்காலங்களில் அக்குணங்கள் முழுமையாக பின்பற்றப்படாவிடினும் ஏதேனும் சில தன்மைகளை கொண்டிருப்பின் அதுவே அவர்களுக்கும் அவர்கள் சார்ந்துள்ள குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நன்மை விளைவிப்பதாய் அமைகிறது .மேற்கண்ட பண்புகள் சிலவற்றை தன் வாழ்க்கையில் கைக்கொண்ட கதைத்தலைவியைக் குறித்து அந்த நாற்பது நாட்கள் என்ற கதை படைக்கப்பட்டுள்ளது

மனித பண்புகளில் ஒன்று பிறருக்கு காலம் அறிந்து உதவுவது பொருளுடையோர் பொருள் இல்லாததற்கு கொடுத்த உதவ வேண்டும் என்பதை பல்வேறு சமயங்களும் இலக்கியங்களும் வலியுறுத்துகின்றன ஏழைகளுக்கு இல்லை என்கிறவர்கள் கடவுளுக்கே இல்லை என்கிறார்கள் என்பதை மிகவும் சிறியவராகிய என் சகோதரனான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்ற வார்த்தையினால் உணர்த்தப்படுகிறது ஒருவருக்கு நன்மை செய்தாலும் தீமை செய்தாலும் இறைவனுக்கு செய்ததாகவே ஆகும் என்பதால் நன்மை செய்வது இறைவனுக்கு செய்ததாகவே மாறுகிறது தீமை நீக்குவது இறைவனின் பணியாகிறது

கோடை வெயிலைத் தான் தாங்கிக் கொண்டு மற்றவர்களுக்கு நிழல் கொடுக்கிற மரம் போல தங்களுக்கு வருகிற துன்பங்களை பெரிதாக்காமல் பிறருக்கு உதவி செய்கிறவர்கள் சிறந்தவர்கள் பெண்களிடம் அடிப்படையில் உதவியாக செயல் விளையும் போது அது குடும்பம் முழுமையிலிருந்து வெளிப்படுவதையும் ஆலமரம் போல் விளைந்து நிலை பெறுவதாகவும் அமைகிறது சிறையில் இருந்து விடுதலை பெற்று உதவி கேட்டு வரும் கிருபாகரனுக்கு உதவும் பெண்ணின் பண்பை 'தெரியாத திசைகள்' என்ற கதை குறிப்பிடுகிறது .தாய் தகப்பனார் இல்லாமல் அனாதை ஆனபின் செய்த குற்றங்களின் அடிப்படையில் பெரிய கொள்ளைக்காரன். அவனைக் கள்ளன் என்ற பார்வையில் நோக்கும் போது பயம் அவளை நடுங்கச் செய்கிறது உடனே தன் மனதை திசை திருப்பி கடவுளைப் பற்றிய சிந்தனையைத் தோற்றுவித்து திடன் கொள்கிறாள்

இயேசு இறக்கும் போது இன்று நீ என்னுடனே பரதீசில் இருப்பாய் என்று முதன்முதலாக விண்ணகத்திற்கு அழைத்துச் சென்றது ஒரு கள்வனை தானே உள்ளத்தில் மாற்றம் ஏற்படுத்த சக்தி மிக்க தெய்வத்துக்கு ஒரே ஒரு வினாடி போதாதா என்ன' ( லீமா ரோஸ், அக்கினி அம்புகள், ப.40)என எண்ணி உடனே அவனை இறைபணியாற்றும் நண்பரிடம் வேலைக்கு சிபாரிசு செய்து அனுப்புகிறாள் அங்கு அவன் நல்லவனாக வாழ்வதை அறிந்து பெருமிதப்படுகிறாள்.

பாவத்திலேயே உழைப்பவர்களுக்கு தவறு செய்வதே தெரியாமல் போய்விடுகிறது ஆனால் இறைவன் அருள் பெற்று திருந்தியவர்கள் எவ்வளவு உறுதியோடு வாழ முற்படுகிறார்கள் ஆயினும் சமுதாயத்தில் அவர்கள் மேலும் புறக்கணிக்கப்படும் போது முன்னிருந்ததைக் காட்டிலும் கொடூரமான வழியை அவள் கண் முன் தோன்றுவது மன இயல்பு இறையரசளித்த இறைவனை வழிபடும் சகோதரிக்கு கள்ளனுக்கும் அத்தகைய உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவது இயல்பான ஒன்று என்றாலும் நடைமுறைப்படுத்திய பெண்ணின் பண்பு உயர்வானது மேன்மையானது அந்த நிலையிலேயே திசை தெரியாது என்ற கதை தீமை இடத்திலும் நன்மை செய்து நிற்கும் பெண்ணின் தன்மையை வெளிப்படுத்துகிறது

**பெண்களின் கடவுள் நிலை பண்பு**

பெண் உடல்வலிமையால் ஆணை விட மென்மையானவள் அறிவுத்திறனில் ஆணுக்கு சமமானவள் சமுதாய பண்பில் ஆணுக்கு மேலானவள் ஒழுக்கப் பண்பாட்டில் எளிதில் பாதிக்கப்படக் கூடியவள் சமய வாழ்வில் மிகுந்த பக்தியுள்ளவள் ஆண்களை விட பெண்கள் பக்திமிக்கவர்களாக இருக்கின்றனர் அவர்களின் மிகுதியான உணர்ச்சி கூறு இதற்கு காரணமாக அமைகிறது மகளிர்க்கு பயபக்தி மரியாதை தொழுது கொள்ளுதல் முதல் என் நற்பண்புகளை வெளிப்படுத்தும் இயல்பு ஆடவர்களை விட மிகுதியாக உள்ளது பொதுவாக பெண்களுக்கு கூறப்படும் அச்சம் மடம் நாணம் பயிர்சி என்னும் குணங்கள் தேவ பக்திக்கு இவர்களது பண்பை மிகுதியாக்குகின்றன என்ற கூற்று பெண்களைப் பற்றியதாகும்.

தன்னை களங்கப்படுத்த வந்தவன் பின்னர் மணக்க வரும்போது அவன் தன் தவற்றினை உணர்ந்து திருந்தியதால் அவனையே மன்னித்து திருமணம் செய்து கொள்வதை கடவுள் தந்த பரிசு என்ற கதை கூறுகிறது ஒருவன் செய்யும் தவறினை உணர்ந்து திருந்தும் போது மட்டுமே மன்னிக்கப்படுகிறான் கடவுள் தீயவனையும் திருத்தி நல்வழிப்படுத்துகிறார் அவரவருடைய வழியில் நடக்கிறவர்கள் இறைவனின் நல்வழியை கண்டு கொண்டு இறைவழியில் நடக்கும் முயற்சி மேற்கொள்ளும் போது சமுதாயத்தை சீர்படுத்துகிறோம் அதற்கு அடிப்படையாக அமைவது பெண்களின் கடவுள் நிலை பண்புகள் என்றவாறு கதை அமைந்துள்ளது இதன் மூலம் பெண்கள் தம் கடவுள் நிலை பண்புகளால் குடும்ப வாழ்விற்கும் சமூக வாழ்வுக்கும் பணியாற்றும் திறத்தினர் என்பது தெரிவிக்கப்படுகிறது.

**சமயமும் விழாக்களும்**

விழாக்கள் கொண்டாடப்படுவதின் நோக்கங்கள் இன்னதென்று ஆராய்ந்து அறிந்து விழாக்களை கொண்டாடுவதனால் நமக்கும் நம் சமய மரபு வழி பயன்பாட்டிற்கும் நலம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை மேலும் பழக்க வழக்கங்களையும் மத ஆசாரங்களையும் அடையாளப்படுத்தும் நல்வாழ்விற்கு பண்டிகைகள் அடித்தளம் எனக் கூறினும் மிகையாகாது. எளிமையே உருவான கிறிஸ்துவுக்கு மக்கள் எம் முறையில் விழா கொண்டாடுகின்றனர் பெருநகரங்களில் கிறிஸ்மஸ் நாளில் பயங்கர குடி சூதாட்டம் வெறி ஒவ்வொரு கிறிஸ்தவனும் வெட்கப்பட வேண்டிய காரியம் இது (இரா ஆரோக்கியசாமி, இக்கால கிறிஸ்தவ தமிழ் இலக்கியம், ப.89) என தவறான போக்குகள் கண்டிக்கப்படுகின்றன.

கிறிஸ்து பிறப்பின் பண்டிகைக்கு துணி எடுப்பதையும் வீட்டை அலங்காரம் செய்வதையும் பலகாரம் செய்வதையும் குறித்து பெரியவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர். அந்நாளில் தன் மகன் தன் செலவை விலக்கி ஏழையான நண்பனின் குடும்பத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறுவதைக் கேட்டு மனம் குடும்பத்தை படைத்து காட்டுகிறார் ‘கிறிஸ்மஸ் கிறிஸ்தவர்கள்’ என்னும் கதையின் ஆசிரியர்.

**முடிவுரை**

பெண்களுடைய படைப்புகளில் பெண்கள் சிக்கல்கள் அணுகும் தன்மையை சமய வாழ்வுக்கு ஏற்புடைய வகையிலும் பெண்களால் நற் குடும்ப வாழ்வு நிலைபெறுதல் நோக்கியும் அமைத்திருத்தலை காணமுடிகிறது நற்பண்புகளை உடையவர்களாகவும் தீய குணங்களை

நீக்குபவர்களாகவும் உதவியாற்றுகிறவர்களாகவும் கடமைகளை நிறைவேற்றுகிறவர்களாகவும் முயற்சிக்கு தூண்டுகோலாக அமைந்தவர்களாகவும் பெண்களை படைத்து காட்டியுள்ளனர். கிறித்தவ மகளிரின் சிறுகதைகள் தனிமனிதன்- குடும்பம்- சமயம்- சமுதாயம் என்ற நிலைகளில் மனிதனை நன்னெறிப்படுத்தி செழுமையான சமுதாயம் உருவாக வழிகாட்டுவதில் வெற்றிபெற்றுள்ளதை அறிய முடிகிறது.

**துணை நூற்பட்டியல்:**


1. ஆரோக்கியசாமி, இரா., இக்கால கிறிஸ்தவ தமிழ் இலக்கியம், கிறிஸ்துவ இலக்கிய சங்கம், சென்னை 1983.
2. இராசமாணிக்கம். மு உளவியல் துறைகள் (முதல் தொகுதி) தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், சென்னை- 1993.
3. காஞ்சனா ஜெயதிலகர் ,காஞ்சனாவின் சிறுகதைகள், வில்பா லிட்ரேச்சர் பி லிமிடெட் வள்ளியூர்-1995,
4. நிர்மலா பாட்ரிக், நற்செய்தி கதைகள், நெல்சன் பதிப்பகம், சென்னை -1989.
5. லீமா ரோஸ், அக்கினி அம்புகள், நாளை வெளியீடு குமரி மாவட்டம் 1992
6. ஹெலன் ஞானப்பிரகாசம், அந்த நாற்பது நாட்கள், ஜெசிந்தா பதிப்பகம் ,சென்னை 1992
7. வேதநாயகம் பிள்ளை, பெண் கல்வி, கழக வெளியீடு, சென்னை 1953
8. புதிய ஏற்பாடு, (புதிய மொழிபெயர்ப்பு) இந்திய வேதாகமச் சங்கம்,பெங்களூர் 1979.